


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தமிழ்த் திரைப்பட உலகத்தின் பழம்பெரும் பின்னணி பாடகர் திருச்சி லோகநாதன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் நார்ட்டன் 3வது தெருவிற்கு "திருச்சி லோகநாதன் தெரு" என்று புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் கே.என்.நேரு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் திருச்சி லோகநாதன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தமிழ்ப்பாடகர் சங்கீத சேவகர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் கிழக்கு வட்டச் சாலைக்கு "சீர்காழி கோவிந்தராஜன் சாலை" என்று புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், அமைச்சர் கே.என்.நேரு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சீர்காழி கோவிந்தராஜன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## பழம்பெரும் பின்னணி பாடகர்கள் திருச்சி லோகநாதன், சீர்காழி கோவிந்தராஜன்,

# மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் பெயர்களில் சாலைகள்!

## பெயர்ப் பலகைகளை காணொலிக் காட்சி வாயிலாக – முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப். 20 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தமிழ்த் திரைப்பட உலகத்தின் பழம்பெரும் பின்னணி பாடகர் திருச்சி லோகநாதன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் நார்ட்டன் 3வது தெருவிற்கு "திருச்சி லோகநாதன் தெரு" என்றும் தமிழ்ப்பாடகர் சங்கீத சேவகர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் கிழக்கு வட்டச் சாலைக்கு "சீர்காழி கோவிந்தராஜன் சாலை" என்றும், இசையமைப்பாளர் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் வசித்து வந்த டிமாண்டி சாலைக்கு "எம்.எஸ். விஸ்வநாதன் சாலை" என்றும் புதிய பெயர் சூட்டப்பட்ட சாலைகளின் பெயர் பலகைகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், இசையமைப்பாளர் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் வசித்து வந்த டிமாண்டி சாலைக்கு "எம்.எஸ்.விஸ்வநாதன் சாலை" என்று புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், அமைச்சர் கே.என்.நேரு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் எம்.எஸ். விஸ்வநாதன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

**திருச்சி லோகநாதன் தெரு!**

தமிழ்த் திரைப்பட உலகத்தின் பழம்பெரும் பின்னணி பாடகரும், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து பல மேடை நிகழ்ச்சிகளில் பாடி அடக்குமுறைக்கு ஆளான தேசபக்தரும், பேரறிஞர் அண்ணா,



முத்தமிழறிஞர் கலைஞர், கலைவாணர் என்.எஸ்.கே. ஆகியோருடன் நெருக்கமான நட்பு கொண்டவரும், தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதும், பேரறிஞர் அண்ணா அவர்களால் இசைத்தென்றல் பட்டமும் பெற்றவரும், இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்பாடல்களை பாடியவருமான திருச்சி லோகநாதன் அவர்களின் கலைச் சேவையை சிறப்பிக்கும் வகையில் அவர் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் நார்ட்டன் 3வது தெருவிற்கு "திருச்சி லோகநாதன் தெரு" என்று பெயர் சூட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

**சீர்காழி கோவிந்தராஜன் சாலை!**

தமிழ் மரபு இசை மற்றும் திரை இசை தழைத்தெழச் செய்த முன்னோடிகளில் ஒருவரும்,



சிறந்த வெண்கலக்குரல் வளமிக்க தமிழ்ப் பாடகர் சங்கீத சேவகர் பத்மஸ்ரீ சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் நினைவாக அவர் வசித்த மந்தைவெளிப்பாக்கம் கிழக்கு வட்டச் சாலைக்கு "சீர்காழி கோவிந்தராஜன் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

**எம்.எஸ். விஸ்வநாதன் சாலை!**

கடந்த 70 ஆண்டுகளாக தென்னிந்திய மக்களைக் குறிப்பாகத் தமிழ் மக்களை



தனது இன்னிசையால், மெல்லிசையால் மகிழ்வித்து, தமிழ் மக்களின் நினைவில் நீங்கா இடம் பெற்றவரும், நம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு அணி செய்யும் விதமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விருப்பத்தின் பேரில் தமிழ்த்தாய் வாழ்த்திற்கு இசையமைத்து,

1970லிருந்து இன்றும் அரசு மற்றும் கல்வி சாலைகளில் தமிழ்த்தாய் வாழ்த்தினை முழங்க செய்தவரும், ஆறு முதல்வர்களுடன் பணிபுரிந்த பெருமைக்குரியவருமான மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களை சிறப்பிக்கும் வகையில் அவர் வசித்து வந்த டிமாண்டி சாலைக்கு "எம்.எஸ்.விஸ்வநாதன் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், அரசு உயர் அலுவலர்கள், திருச்சி லோகநாதன், சீர்காழி கோவிந்தராஜன், எம்.எஸ்.விஸ்வநாதன் ஆகியோரது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற சாம்பியன்ஸ் ஆப் தமிழ்நாடு ஐந்தாண்டு கால விளையாட்டுச் சாதனை விழாவில், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் 62 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 178 விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை இந்தியா கூட்டணித் தலைவராக்க வேண்டும்!

### சிவசேனா கட்சி வலியுறுத்தல்!

மும்பை, பிப்.20-

தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அல்லது மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியை இந்தியா கூட்டணியின் தலைவராக்க வேண்டும் என்று உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி வலியுறுத்தியுள்ளது.

சிவசேனாவின் 'சாம்னா' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையில், பா.ஜ.க.,வின் ஆதிக்கத்தை வீழ்த்த வேண்டுமானால், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அல்லது மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி போன்ற ஒரு வலிமையான தலைவரை இந்தியா கூட்டணியின் தலைவராக இப்போதே அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அல்லது திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவர் மம்தா பானர்ஜி ஆகியோரில் ஒருவர் இந்தியா கூட்டணியின் தலைவராக வேண்டியது மிக, மிக அவசியம் மற்றும் அவசர தேவை என்றும் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி தெரிவித்துள்ளது.

மதத்தை வைத்து அரசியல் செய்யும் பா.ஜ.க.,வை வீழ்த்த, தேர்தல் வரும் வரை காத்திருக்காமல் ஒரு தெளிவான தலைமையின் கீழ் அணி திரள்வது காலத்தின் கட்டாயம் என்றும் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி தெரிவித்துள்ளது.

## தமிழ்நாட்டில் மார்ச் 16ல் மாநிலங்களவை தேர்தல்!

புதுடெல்லி, பிப்.20-

தமிழ்நாட்டில் காலியாகும் 6 மாநிலங்களவை எம்.பி. உள்பட 37 எம்.பி. பதவிகளுக்கு மார்ச் 16ல் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 10 மாநிலங்களில் 37 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு வரும் மார்ச் 16ம் தேதி தேர்தல் நடைபெறும். பிப்.26ம் தேதியன்று இதற்கான அறிவிக்கை வெளியாகும்.

வேட்புமனுக்கள் தாக்கல் அன்றைய தினமே தொடங்கும். மார்ச் 5, வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள். மார்ச் 9ல் வேட்புமனுக்கள் வாபஸ் பெற கடைசி நாள். வாக்கு எண்ணிக்கையானது வாக்குப் பதிவு நாளிலேயே நடை பெறும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 26ம் தேதியுடன் 37 மாநிலங்களவை எம்.பிக்களின் பதவிக் காலம் முடிவடையும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் தி.மு.க.வின் திருச்சி சிவா, என்.ஆர். இளங்கோ, அந்தியூர்.செல்வராசு, கனிமொழி என்.வி.என். சோமு, அ.தி.மு.க.வின் தம்பிதுரை, அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள த.மா.க.வின் ஜி.கே.வாசன் உள்ளிட்டோரின் பதவிக் காலம் முடிவடைகிறது. இதனால், தி.மு.க. 4 எம்.பி.க்கள், அ.தி.மு.க. 2 எம்.பி.க்களை நிறுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கேள்விக் கென்ன பதில் ?

**கேள்வி :**

**"வெளியே அழகாக இருக்கும், உள்ளே சொத்தையாக இருக்கும் தி.மு.க.வின் பட்ஜெட், அத்திப் பழம் போல உள்ளது" என்று எடப்பாடி பழனிசாமி கூறியிருக்கிறாரே ?**

**பதில்:**

அத்திப் பழத்தைப் பற்றி எடப்பாடி கூறியிருப்பது ஆதிகாலக் கருத்து.

அத்திப்பழத்தில், நார்ச்சத்து, பொட்டாஷியம், கால்சியம் மற்றும் ஆன்ட்டி ஆக்ஸிடென்ட்டுகள் நிறைந்து,சத்து மிகுந்த பழம் என்பது இன்றைய விஞ்ஞானக் கருத்து.

அத்திப்பழம், இதய ஆரோக்கியம், இரத்த அழுத்தம், எலும்பு ஆரோக்கியம் ஆகிய வற்றுக்கு உன்னதமானது.

மேலும் எடை மேலாண்மை, மலச் சிக்கல் நிவாரணம், ஒட்டு மொத்த ஆரோக்கியத்திற்கு சிறந்தது அத்திப்பழம் !

தமிழ்நாடு பட்ஜெட் , அத்திப்பழம் போன்றது என்று முழுமையாக அறியாமலேயே சொன்ன திலிருந்து, அதன் சிறப்புகளை எடப்பாடி ஏற்கிறார் என்றுதான் கொள்ள வேண்டும்.

எனினும் அவர் தன்னை நவீனப் படுத்திக் கொள்வது நன்று !